# கேசவதேவ் -‘ஓடையில் நின்னு’ நாவலில் அடித்தள மக்களின் வாழ்வியல்

முனைவர் பொ.கோகிலா

*செம்பட்டி*

**முன்னுரை**

நாவல் இலக்கியம் காலத்தால் உருவான கலை வடிவமாகும். ஐரோப்பியர் வருகையினால் தமிழுக்குக் கிடைத்த இலக்கிய வகைகளில் ஒன்றான இதனை நாவல், நவீனம், புனைகதை என்றும் வழங்குவர். மனித வாழ்க்கையைச் சித்தரிக்கும் இலக்கிய வகையான நாவல் இலக்கியத்தினை மனித வாழ்க்கையில் காணக்கூடிய பாத்திரங்களையும் அவர்களுக்கு நேரக்கூடிய சிக்கல்களையும் மையமாகக் கொண்டு படைப்பாளர்கள் சமுதாய நாவல், வட்டார நாவல், பெண்ணிய நாவல் எனப் பல வகைகளில் படைத்து வருகின்றனர். அவ்வகையில் மலையாளப் புனைகதையுலகில் சிறப்பு மிக்கவராகக் கருதப்பெறும் கேசவதேவ் -ன் ஓடையில் நின்னு நாவலில் அமையப்பெற்றுள்ள சமுதாயத்தில் அடித்தள மக்களின் வாழ்வியல் சூழல்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

**கேசவதேவ் - ஆசிரியர் குறிப்பு**

மலையாள எழுத்தாளர்களில் புனைகதையுலகில் தனித்திறம் பெற்றவரான பி.கேசவதேவ் கேரளமாநிலத்திலுள்ள கொச்சினில் கேட்டமங்கலம் என்னும் ஊரில் வடபரவூர்நாயர் குடும்பத்தில் 1904 – ஆம் ஆண்டு ஜீலை மாதம் 20 – ஆம் தேதியன்று பிறந்தார். இவரது தாயார் நல்லேட்டத்து கார்த்தியாயினி அம்மா, தகப்பனார் கொச்சுவீட்டு அப்புப்பிள்ளையாவார். எட்டாம் வகுப்போடு பள்ளிப்படிப்பை நிறுத்திய கேசவதேவ் வறுமையெனும் உலைக்களத்தில் இளமை முதலாக வார்த்தெடுத்ததன் விளைவாக சிறுவயதிலே சமுதாயக் கோணப்போக்குகளையும் அதற்குத் துணையாயமைந்துள்ள சாதி, மத வேறுபாடுகளையும் பொருளற்ற பழக்க வழக்கங்களையும் துணிச்சலுடன் எதிர்ப்பவராகத் திகழ்ந்துள்ளமையை ‘திருஞ்சு நோட்டம்’ ‘எதிர்ப்பு’ என்னும் சுயவரலாற்று நூல்களின் வாயிலாக அறியமுடிகிறது.

சமுதாயத்தில் காணும் குறைபாடுகளே மனித முன்னேற்றத்தைத் தடுக்கும் தடைக்கற்கள் என அழுத்தமாகக் கருதும் கேசவதேவ் சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் சாதாரண மக்களையே தம் படைப்புகளின் கதாநாயகராகத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாகத் தனது வாழ்க்கை நிகழ்வுகளை அழகுற எடுத்துச் செல்கிறார். இதற்கு உதாரணமாக ‘ஓடையில் நின்னு’ நாவல் அமையப்பெற்றுள்ளது.

**நாவல் கதைச்சுருக்கம்**

நாவலில் முதன்மைக் கதாப்பாத்திரமாக வரும் பப்பு எட்டாம் வகுப்போடு பள்ளிப்படிப்பை விட்டு தனக்கென்று ஒரு கூட்டத்தை உருவாக்கி வாழ்கிறான். ஊரில் பண்ணையாரின் வழியாக பல இன்னல்களைப்பெற்ற அவன் பண்ணையாருக்குத் தக்க பதிலடி கொடுத்து விட்டு ஊரை விட்டு வெளியேறி நகரத்திற்கு செல்கிறான். நகரத்தில் தலைச்சுமை தூக்கும் கூலி ஆளாகவும் சிறிது காலம், பீடித் தொழிலாளியாக சிறிது காலம், பிறகு சோடா தயாரிக்கும் பிரிவில் உதவியாளராகச் சேர்கிறான். பின்னர் நூற்பாலையில் தொழிலாளியாகச் சேர்கிறான் இவ்வாறு பல வேலைக்குச் சென்றாலும் அநீதியையும், அடக்குமுறையையும் எதிர்ப்பதில் சுயமானவனாக இருப்பதனால் வெளியேற்றப்படுகிறான். சிறிது காலம் சிறைவாசத்திற்குப் பின் வாழ்க்கை நடத்த ரிக்ஷா இழுக்கிறான். ரிக்ஷா இழுக்கும் போதும் கண்ணியம் நேர்மைகுறையாதவனாக வாழ்கிறான். ஒருநாள் எதிர்பாராத விதமாக ஒரு ஏழைச்சிறுமியின் மீது மோதி சாக்கடையில் விழுந்துவிடுகிறாள் இறுகிப்போய்க் கிடந்த அந்த கிளர்ச்சிக்காரனின் வாழ்க்கையில் இது ஒரு திருப்புமுனையாக அமைய அன்றிலிருந்து சாக்கடையில் விழுந்த லஷ்மி மற்றும் அவளது தாய் கல்யாணிக்கும் வாழ்வின் ஆதாரமாக மாறுகிறான். அவர்களின் வாழ்க்கையை ஏற்றப்படுத்த

பப்பு தன்னை ஒரு தோணியாக உருவாக்கிக் கொண்டு தனது வாழ்வின் லட்சியத்தை நிறைவேற்றி விடுகிறான். இறுதியில் காசநோயால் அவதிப்பட்டு முடிவு நிலையில் இருப்பவனாகக் கதையமைகிறது.

**அடித்தள மக்களின் வாழ்க்கை நிலை**

**வறுமை**

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையே வறுமை என வரையறை செய்யப்படுகின்றது. தமது அன்றாட தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்ற குறைந்தளவு தேவைகளை கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத ஒரு நிலையே வறுமை ஆகும். வறுமை நிலையில் உழலும் மக்களின் வாழ்க்கை நிலையை கேசவதேவ் தனது ஓடையில் நின்னு நாவலில் சாக்கடையில் விழுந்த லஷ்மி அவளது தாயையும் காக்க வரும் பப்பு எனும் பாத்திரத்தின் வாயிலாக சமுதாயத்தில் வாழும் அடித்தள மக்களின் வாழ்வுக்கான போராட்டங்களையும் படம் பிடித்துக் காட்டுகிறார். சிறுவயதிலே வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் சமூகத்தில் தனக்கென மதிப்பினைப் பெறாத நிலையை பப்புவின் பள்ளி வாழ்க்கையில் புலப்படுத்துகிறார். மேலும் பப்புவின் குடும்பம் ஊரில் மிராசுதாரரின் கீழ் அடிபணிந்து வாழும் வாழ்க்கையை பப்பு தனக்கு நிகழ்ந்த அநீதியை எதிர்த்த போது மிராசுதாரின் வாயிலாக அவனுக்கு வீட்டில் இடமின்றி போகிற நிலையினை

''மிராசுதாரரின் உத்தரவை நிறைவேற்றாவிட்டால் வம்பு, பப்புவின் அப்பன் தன் வீட்டிற்குச் சென்று நடந்ததைத் தன் மனைவியிடம் பப்புவை வீட்டில் சேர்க்க வேண்டாமென்றும் அவனுக்கு ஒன்றும் கொடுக்க வேண்டாம் என்றும் சொன்னான்'' (ப.8) என்னும் வரிகளின் வாயிலாகப் அடித்தள மக்களுக்கு மேல் வர்க்கத்தினரின் வாயிலாகக் கிடைக்கும் அவல வாழ்க்கையைக் குறிப்பிட்டுச் செல்கிறார். கிராமத்திலிருந்து வெளியேறிய பப்புவிற்கு நகரத்தில் எவ்வித உதவியும் கிடைக்காத நிலையை ''பசியும் களைப்பும் பொறுக்க முடியாமல் போனபோது அவன் ஒரு கடைத்திண்ணையில் ஏறி உட்கார்ந்து கொண்டான். பரிச்சயமுள்ள முகம் ஒன்று கூட அவன் கண்களுக்குப் புலப்படவில்லை. அவன் அங்கிருப்பதை அந்த நகரில் ஒருவர் கூட கவனிக்கவில்லை'' என்று குறிப்பிடுகிறார்.

**லஷ்மியின் குடும்ப நிலை**

கதையில் முக்கியக் கதாப்பாத்திரமாகச் செயல்படும் லஷ்மி தனது தந்தை இறந்த பிறகு சிறுவயதிலே வறுமையில் தள்ளப்படுகிறாள். அந்நிலையில் எதிர்பாராத விதமாக பப்புவினால் சாக்கடையில் விழுந்த லஷ்மியை மீட்டு அவளுக்கு உதவுகிறான். தனது தவறுக்கான பதிலாக அவளுக்கு உணவுக்கு தேவையானவைகளைக் வாங்கித் தருகிறான். தற்போது என்ன சாப்பிட்டாய் என பப்பு அச்சிறுமியிடம் வினவும் போது ''மத்தியானம் ஒரு சட்டி பச்சைத் தண்ணீர் குடிச்சேன்'' என்று பதிலளிப்பதன் வாயிலாக அச்சிறுமியின் ஏழ்மையைச் சுட்டுகிறார். வயிறார உணவும், உடுக்க நல்ல உடையுமின்றி பெருந்துயரில் வாழும் லஷ்மி மற்றும் அவளது தாய் கல்யாணி இருவரின் குடும்ப நிலையை ''ஒரு ஓலைக்கூரை வேய்ந்த குடிசை அது குடிசையில் இரண்டு அறைகளும் ஒரு அடுக்களையும் அழுக்கு மண்டிக்கிடந்தது என்று அவர்களின் இருப்பிடத்தைக் கூறுகிறார். கணவனின் இறப்பிற்குப் பிறகு பொருளாதாரமற்ற நெருக்கடிச் சூழலில் அவ்விருவரும் வாழ்வதனை,

''சாமி கிருபையிலே எப்படியோ நடந்துகிட்டிருக்கு. கஞ்சு குடிச்சும்..குடிக்காமலும் மலை போல இருந்த மனுஷனை தெய்வம் கொண்டு போயிட்டதே'' ''நாங்க இப்படி அவஸ்தைப்படனுமுன தெய்வத்தின் ஆசையாயிருக்கும்'' ''ராத்திரிச் சாப்பாடுங்கறதே மறந்து போயிடுச்சி. லஷ்மியின் அப்பன் செத்த பிறகு நாங்கள் கஞ்சி தான் குடிக்கறது. எனக்கு ஒரே ஒரு ஆசைதான். என் குழந்தைக்கு ஒரு வேளையாவது வயிறு நிறைய சோறு போடனுமுன்னு'' (ப.28) என்று குறிப்பிடுகிறார்.

**பப்புவின் வாழ்வாதாரம்**

இளம்பிராயத்திலே பள்ளியையும், ஊரையும் விட்டு வெளியேறியப் பல தொழில்களைச் செய்து அன்றாடம் அன்றைய நாள் வாழ்க்கையை மட்டும் அனுபவித்துக் கொண்டு வாழ்வில் எந்த ஒரு பிடிப்பும், எதிர்பார்ப்பும் இல்லாத நிலையில் வாழ்ந்த பப்புவிற்கு சாக்கடையிலிருந்து எடுத்து விடப்பட்ட சிறுமிக்கு வாழ்வாதாரமாக விளங்கிப் போகிறான். குடிசையில் துன்பத்தோடு வாழ்ந்து கொண்டிருந்த விதவைத் தாயாரையும் அவளது மகளாகிய அந்தச் சிறுமியையும் மிகவும் விரும்பினான். இதுநாள் வரை தனக்கென்று குடியிருக்கத் தனி இடமோ, தன்னைக்

கவனிப்பதற்குரிய உறவினர்களோ இல்லாதிருந்த பப்பு அந்தச் சிறுமியின் குடிசையில் வாழ்கிறான். தன் மகளான லஷ்மிக்காகவும் அவளது தாயாருக்காகவும் பப்பு கடினமாக உழைத்து லஷ்மியை படிப்பில் பெரிய ஆளாக்கிவிட அரும்பாடுபடுவதனை

“பப்பு ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டேயிருந்தான். விடிவதற்கு முன்பே எழுந்திருந்து வீட்டை விட்டு வெளியேறி விடுவான். பாதி ராத்திரி கடந்தே வீடு திரும்புவான். சாப்பிட்டு விட்டுப் படுத்தால் தூக்கம் வந்ததோ இல்லையோ, மறுபடியும் எழுந்து போக வேண்டியதுதான். இரவில் மட்டும் தான் சாப்பாடு மற்றவேளைகளில் டீயோ எதோ குடிப்பான்.”(ப.43) இந்நிலையில் அவனுக்கு காசநோய் வந்து விடுகிறது. தீராத இருமல்களுக்குமிடையில் அவனது எண்ணம் தான் கொண்ட லட்சியத்தை முடிப்பதிலேயிருந்ததனை

“பப்புவுக்கு அந்நோயின் பயங்கரத்தன்மை தெரியும் அது தரும் மரண வேதனையை அவன் கண்டிருக்கிறான். மரணத்தைக் குறித்தும் அவனுக்கு பயமில்லை ஆனால் அவனுக்கு வாழ்க்கையில் ஒரு விரதம் இருந்தது. ஒரு லட்சியம் இருந்தது. அதைச் சாதிப்பதற்கான சிரமத்தில் வேதனைகளும் மரணமும் அவனைப் பயப்படுத்தவில்லை” (ப.54) என்கிறார். தனக்கு வந்திருக்கும் நோயினையும் ஓய்வு எடுத்துக் கொள்ள லஷ்மியும் கல்யாணியும் வேண்டியும் அவர்களைக் காப்பற்ற எண்ணிய பப்பு தன்னை ஒரு தோணியாக உருமாற்றிக் கொண்டதனை

“அந்த வாழ்க்கைத் தோணி எத்தனையெத்தனை அலைகளைச் சமாளித்திருக்கிறது. அசாதாரணமான தியாகபுத்தி, அடக்கினால் அடங்காத சுதந்திர மனப்பான்மை இவையிரண்டைத்தவிர வேறு ஏதுமில்லை அத்தோணியின் போக்கைக் கட்டுப்படுத்த. வறுமைத்த திமிங்கலத்தின் வாயிலிருந்து காப்பாற்றப்பட்ட இரண்டு உயிர்களின் பாரத்தையும் அந்தத் தோணி தாங்க வேண்டி வந்தது. இருளும் குளிரும் நிறைந்த இரவுகளில் அத்தோணி இயங்க வேண்டி வந்தது. அலைகளில் அடிபட்டு அதன் பக்கங்களில் பொத்தல்கள் தோன்றத் தொடங்கி விட்டன. எந்த நிமிடத்திலும் அது நீரில் மூழ்கி விடக்கூடும். இருந்தாலும் அது சென்று கொண்டே இருந்தது” (ப.70) என்று பப்புவின் தியாக மனப்பான்மையையும் திடத்தினையும் அழகுற எடுத்துரைக்கின்றார்.

அன்பும் பரிவும், அசாதாரண தியாக உணர்வும், அடக்கினாலும் அடங்காத சுதந்திர மனப்பான்மையும், எந்நிலையிலும் யாருக்காகவும் இம்மியும் விட்டுக் கொடுக்காத சுயமரியாதைப் பண்பும் கொண்டதனை

“பரிதாபம் காட்டவும், சிறு உதவிகள் செய்யவும் பலரிருந்தார்கள் ஆனால் பரிதாபமும் உதவியும் அவன் ஏற்றுக் கொள்ள மாட்டான். அவன் சகாக்கள் அனுதாபத்தோடு கொடுக்கும் சாயாவும் பீடியும்கூட அவன் வாங்கிக் கொள்ள மாட்டான். அவனது ஆண்மையும் சுதந்திர மனப்பான்மையும் அனுதாபத்தை ஏற்றுக்கொள்ளவும் மற்றவர்களின் உபகாரத்தைப் பெற்றுக் கொள்ளவும் அவனை அனுமதிக்கவில்லை. அந்த நிலையிலும் அவன் தலைநிமிர்ந்து தான் நடந்து கொண்டிருந்தான்” (ப.63) “வேலை செஞ்சும் கூலி வாங்கியும் பழகிய கை இது அன்பளிப்பு வாங்கி இதுக்குப் பழக்கமில்லே” (ப.65) என்று ரிக்ஷாக்காரன் பப்புவின் வழியாக சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் ஏழைகளின் வாழ்வை அவர்கள் உள்ளத்தில் அடித்தளத்தில் உறங்கிக் கிடக்கும் உயர் பண்புகளை உள்ளமுருகும் வண்ணம் படம் பிடித்துக் காட்டிப் படிப்போரை கண்ணீர் சிந்த வைத்து விடுகின்றார். சாதாரண மக்களின் வாழ்க்கையைக் கவ்விப் பிடித்துக் கொண்டிருக்கும் வறுமை, அறியாமை, வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து விடுபட மனிதர்கள் கடைபிடிக்கும் குறுக்கு வழிகளையும் தீய மனங்களையும் மீறி தன்மானத்தோடு வாழும் மனித உள்ளங்களின் உயர்பண்புகளை பப்புவின் வழியாக நிறுவுகிறார்.

**முடிவுரை**

கேசவதேவ் ‘ஓடையில் நின்னு’ என்னும் குறுநாவலின் வாயிலாக வாழ்க்கைத் தட்டின் கடைசிப்பகுதியில் நின்று வாழ்க்கையோடு போராடும் சாதாரண ஏழையிடமும் தியாகமும் அன்பும், அரும்பி மணம் பரப்ப முடியும் என்னும் உண்மையை அழகுற எடுத்துக்கூறுகிறார். தான் துவளும் நிலையிலும் தன்மானத்தை விடாது தன் கையை நம்பி வாழும் உன்னத உயர் பண்பினையும், தான் கொண்ட விரதத்தில் வெற்றி காண வாழ்க்கைத் தோணியில் நீந்திய சாதாரண மனிதனின் சமர்ப்பணத்தினையும், பெருந்தன்மையையும் இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

## துணைநூல்கள்

[1] முனைவர் செ.ரவிசங்கர், குலோத்துங்கன் கவிதைவளம்,.

[2] பி.கேசவதேவ், ஓடையில் நின்னு,.

[3] மணவை முஸ்தபா, இன்றைய தென்னக இலக்கியப் போக்கு,.

[4] மு.பழனி இராகுலதாசன் (மொ.ஆ), இந்திய இலக்கியச் சிற்பிகள் கேசவதேவ்,.

[5] பி.பரமேஸவரன் நாயர், மயைாள இலக்கிய வரலாறு,.